**MCOP: 4**/2025

Date: 27.01.2026.

ம.சா.1 அருணா, த/பெ. சுந்தர்

**<u>சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

நான் AVM மருத்துவமனையில் இரவு 10.00 மணிக்கு சிகிச்சையில் சேர்ந்தேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.5 ல் நான் வேறிடத்தில் மருத்துவம் பார்ப்பதாக சிகிச்சையிலிருந்து வேளியேறிவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பின்பு வேறிடத்தில் மருத்துவம் பார்த்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6 ல் எனக்கு என்னவிதமான சிகிச்சை அளிக்கப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி மருத்துவமனைகளில் இருந்து நான் சிகிச்சை எதுவும் எடுத்துக்கொள்ளாமல் வழக்கிற்காக அந்த பில்களை மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதால் இந்த எதிர்மனுதாரர்கள் எந்தவித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் அதிகமான தொகை கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள தொகை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

நான் சொல்வதுபோல் லாரி ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் இந்த விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

**ஒம்/– R.V.ராஜகுமார்,**<br>**தலைமை நீதித்துறை நடுவர்,**<br>**தூத்துக்குடி.**